# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 85 /2016**

திரு. கே. லோகநாதன்,
165, ஜி.எஸ்.டி ரோடு,
திரு நகர்,
மதுரை . . . மேல்முறையீட்டாளர்
(திரு. கே. லோகநாதன்)

எதிர்

செயற்பொறியாளர்/இ&ப/திருமங்கலம்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
துணை மின் நிலைய வளாகம்,
உசிலம்பட்டி ரோடு, திருமங்கலம் – 625 706. . . . எதிர்மனுதாரர்
(திரு. முத்துராமலிங்கம்/உதவி செயற்பொறியாளர்,
கப்பலூர்)

**கேட்புரை நாள் : 18–1–2017**

**ஆணை நாள் : 9.5.2017**

திரு. கே. லோகநாதன், திருநகர், மதுரை அவர்களின் 14.10.2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண். 85/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 18.1.2017 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும்

கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

அவரது மேல்முறையீட்டு மனுவை கோப்பிற்கு எடுத்து அவரது தரப்பு வாதங்களையும் தாக்கல் செய்துள்ள ஆவணங்களையும் பரிசீலனை செய்து மதுரை மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், மதுரை மின் பகிர்மான வட்டம், மதுரை அவர்கள் வழங்கிய த/மிநுகுதீம/ மதுரை/ செய/கோ.மி.நு.கு.தீ.ம/ஆணை அ.எண்.748/2016 நாள் 17.9.2016 ஆணையை ரத்து செய்து அவருக்கு மின்இணைப்பு வழங்க உத்தரவிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளர் மதுரை மாவட்டம், தெற்கு தாலுகா திருப்பரங்குன்றம், சப்டி, மேற்கு விளாச்சேரி கிராமத்திற்குட்பட்ட கதவு எண்.3/729–ஏல் உள்ள புதிய வீட்டிற்கு மின்இணைப்பு கோரி 16.5.2015ல் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

2.2 மேற்கண்ட மின்இணைப்பு வழங்க மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு மதிப்பீட்டு கட்டணம் 5.6.2015ல் செலுத்தியுள்ளார். மின்பாதை விஸ்தரிப்பு பணி செய்யும்பொழுது திரு. ப. விருமாண்டி பாதை உள்ள இடம், அவருடையது என்று ஆட்சேபனை செய்ததின் பேரில் வேலை நிறுத்தி வைக்கப்பட்டது.

2.3 மேலும், திருமதி. பி. சரோஜா அவர்களும் மின்பாதை அமைக்கும் இடத்தில் மின்கம்பம் ஊன்றக்கூடாது என்று 22.12.2015ல் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

2.4 மேல்முறையீட்டாளர் மாற்றுபாதையில் மின் இணைப்பு தரவேண்டி 6.4.2016ல் மீண்டும் மனு செய்துள்ளார்.

2.5 மேலும், மாற்றுப்பாதையில் திருமதி பத்மா அவர்களுக்கு மின் விஸ்தரிப்பு பணி செய்தால்தான் மின்பாதை அமைக்க முடியும் என்பதால் திருமதி. பத்மா அவர்களின் விண்ணப்பத்தோடு தொடர்ந்து மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. ஆனால், மின் விஸ்தரிப்பு பணிகள் முடிந்த பின்பு, கீழ்கண்டவர்கள் ஆட்சேபனை செய்துள்ளார்கள்.

(i) திரு. பி. பாலமுருகன், பிளாட் எண்.8, மொட்டலை கீழ்புரம் விளாச்சேரி

(ii) திருமதி. புஷ்பராணி க/பெ ஜேம்ஸ், பிளாட் எண்.7, மொட்டலை கீழ்புரம், விளாச்சேரி

2.6 மேலும், பொதுப்பாதை குறித்து 4.6.2016 அன்று மதுரை மேற்கு தாசில்தார் அவர்களுக்கும் கிராம நிர்வாக அலுவலருக்கும் சான்று அளிக்குமாறு உதவிப் பொறியாளர் ஊரகம், திருப்பரங்குன்றம், அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், பதில் பெறவில்லை.

2.7 மேலும், பாதை பொதுப்பாதை என்று வருவாய்துறையினரிடம் சான்றிதழ் பெற்றுத்தரும்படி முறையீட்டாளருக்கு 24.7.16 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

2.8 தன்னுடைய விண்ணப்பத்திற்கு மின் இணைப்பு வழங்கப்படவேண்டும் என்று மதுரை மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார். மன்றம் தன்னுடைய ஆணையை 22.7.2016ல் தெரிவித்துள்ளது.

## 3. <u>மன்றத்தின் தீர்வு:</u>

மதுரை மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் தன்னுடைய 22.7.2016 நாளிட்ட ஆணை மூலம் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் குறிப்பிட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"*5.மன்றத்தின் தீர்வு*

*முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் அவர்களால் மன்றம் கேட்புரையில் எடுத்துரைக்ககப்பட்ட வாதங்களின் அடிப்படையில் மதுரை மேற்கு விளாச்சேரியில் பிளாட் எண்.28, 29ல் உள்ள முறையீட்டாளரின் புதிய வீட்டில் பொதுப்பாதை இல்லாத காரணத்தினால் மின் இணைப்பு வழங்கவில்லை என்றும் மேலும், திருமதி. பத்மா அவர்கள்*

*ஆட்சேபனை சரி செய்யும் பட்சத்திலும் அல்லது பொது பாதை ஏதாவது தேர்வு செய்யப்பட்டால் அதற்கான புதிய மதிப்பீடு தயார் செய்து அதற்குண்டான முழு கட்டணம் கட்ட சம்மதிக்கும் பட்சத்தல் முறையீட்டாளருக்கு மின்இணைப்பு வழங்கப்படும் என்று எதிர்மனுதாரர் தெரிவித்ததை முறையீட்டாளரும் மன்றமும் ஏற்றுக்கொண்டு மேற்கண்ட தீர்வுடன் மனு எண்.23/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. "*

4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>

4.1 அவர் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறார். மேலும், அவர் ஒரு மாற்றுத்திறனாளி ஆவார். மதுரை மாவட்டம், தெற்கு தாலுகா, திருப்பரங்குன்றம், சப்டி, மதுரை தெற்கு தாலுகா, மேற்கு விளாச்சேரி கிராமத்திற்குட்பட்ட சர்வே நம்பர் 352/2பி, 6 1/4 செண்ட் நிலத்தினை சர்வே நம்பர் 352/2சி செண்ட் 71/2 நிலத்தினையும், சர்வே நம்பர் 352/2டி செண்ட் 61/4ல் கட்டுப்பட்ட நிலத்தினையும் கடந்த 30.11.2009ம் தேதி அன்று கிரையம் வாங்கினார்.

4.2 மேற்கண்ட அவர் கிரையம் பெற்ற சர்வே எண் 352/2பில் கட்டுப்பட்ட மனை இடத்தில் வீடு கட்டுமான பணிகள் மேற்கொள்வதற்காகவும் பிறகு கட்டுமானப்பணிகள் முடித்து குடிபுகுவதற்காகவும் புதிய மின்இணைப்பு பெற கடந்த 1 1/2 ஆண்டுகளாக முயற்சி செய்து வந்த நிலையில் கடந்த 16.5.2015 அன்று மின்இணைப்புபெற ரூ.50/– கட்டணம் செலுத்தி செயற்பொறியாளர்/பகிர்மானம்/திருமங்கலம் அவர்களுக்கு மனு செய்திருந்தார். அதன்படி மின்பொறியாளர் ஊரகம் திருப்பரங்குன்றம் அவர்களால் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

4.3 பின்பு மின்இணைப்பிற்கு மின்பாதை விஸ்தீரணம் செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 23.5.2015ல் அனுமதியும் வழங்கப்பட்டது. அதற்கான தொகையினை கடந்த 5.6.2016 அன்று செலுத்தி உள்ளார்.

4.4 இந்நிலையில் மேற்படி இடத்தில் 26.4.2016 அன்று மின்பாதை விஸ்தரிப்பு பணி செய்யும்போது திரு. பா விருமாண்டி, த/பெ பால்சாமி தேவர், 71, டி.வி. நகர், தனக்கன்குளம், மதுரை என்பவர் பட்டா இடம் என்று ஆட்சேபனை தெரிவித்து இருப்பதாக மதுரை மின்நுகர்வோர்

குறைதீர்மனற்ம் மதுரை மின்பகிர்மன வட்டம், மதுரை தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி இடத்தில் பொதுப்பாதை உள்ளதாக கிராம நிர்வாக அதிகாரி மற்றும் சிறு அளவர் அளித்த ஆவணத்தில் உள்ளது. அதனை மதுரை மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் மின்பகிர்மான வட்டம், பரிசீலிக்கவில்லை. மேலும், பொதுப்பாதை உள்ளதாக விளக்கும் லே அவுட்—ல் மாடசாமி நகர் (வரைபடம்) உள்ளது. அதையும் பரிசீலிக்காமல் மேற்படி விருமாண்டி என்பவரின் ஆட்சேபனையையும் மட்டும் ஏற்றுக்கொண்டிருப்பது சட்டப்படி தவறு.

4.5 மதுரை மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் மதுரை மின்பகிர்மான வட்டம் மன்றம் வழங்கிய தீர்ப்பில் கூறியுள்ளபடி அவருக்கும், திருமதி. பத்மாவுக்கும் க/பெ சுந்தரபாரதி எவ்வித தொடர்பும் கிடையாது. அவர் மேற்படி நபருடன் சேர்ந்து கொண்டு மின்இணைப்பு பெற வேண்டி எவ்வித மனுவும் கூட்டாக அளிக்கவில்லை. தனியாகத்தான் செயற்பொறியாளர் மின்பகிர்மான வட்டம் திருமங்கலம் அவர்களிடம் மின்இணைப்பு பெற மனு அளித்திருந்தார். வேண்டுமென்றே அவரை மாற்றுத்திறனாளி என்றுகூட பாராமல் அலைகழிக்கும் நோக்கத்துடன் அவருக்கு மின்இணைப்பு தரக்கூடாது என்ற தவறான எண்ணத்தில் திசைதிருப்பும் நோக்கத்தில் திருமதி. பத்மா என்பவருடன் அவர் மின்இணைப்பு கேட்டு இணைத்து தாக்கல் செய்ததாக மேற்படி மதுரை மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் மதுரை மின்பகிர்மான வட்டம் மதுரை வழங்கிய தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. இது சட்டப்படி தவறான ஒன்றாகும்.

4.6 மேலும், மதுரை மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் மதுரை மின்பகிர்மான வட்டம் வழங்கிய தீர்ப்பில் திருமதி. பத்மா என்பவருக்கு மின்பாதை அமைக்க எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், மின்பாதை அமைக்க எதிர்ப்பு தெரிவித்த நபர் யார் என்றும் எந்த விதத்தில் அவரது எதிர்ப்பு பதிவு செய்யப்பட்டது என்பதை மேற்படி மதுரை

மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் மதுரை மின்பகிர்மான வட்டம் வழங்கிய தீர்ப்பில் கூறப்படவில்லை.

4.7 மேலும், மதுரை மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் மதுரை மின்பகிர்மான வட்டம் வழங்கிய தீர்ப்பில் சட்டப்பிழைகளும் பல்வேறு குளறுபடிகளும் நிறைந்துள்ளது. மேலும், அவரது தரப்பு ஆவணங்களை சரியான முறையில் பரிசீலிக்காமலும் அவரது தரப்பு வாதங்களை எடுத்துரைக்க போதிய கால அவகாசம் அளிக்காமலும் ஒருதலைப்பட்சமாகவும் இயந்திரதனமாகவும் ஒரு தவறான தீர்ப்பினை மதுரை மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் மதுரை மின்பகிர்மான வட்டம் கடந்த 17.9.2016 அன்று அவர்களால் வழங்கிய தீர்ப்பாணை அவசர கதியில் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

4.8 அவர் வீடு கட்டுவதற்கு முறையாக விளாச்சேரி ஊரராட்சி மன்றத்தில் மனு செய்து அதற்கான அனுமதியையும் (plan approval) பெற்றுள்ளார். மேலும், முறையாக வீட்டுவரி வகையறாக்களையும் செலுத்தி வருகிறார். மேற்படி மதுரை மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் மதுரை மின்பகிர்மான வட்டம் வழங்கி தீர்ப்பில் கவனத்தில் கொள்ளாமல் அவசர கதியில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:</u>

5.1 மதுரை மாவட்டம், தெற்கு தாலுகா, மேற்கு விளாச்சேரிக்குட்பட்ட கதவு எண்.3/729ஏல் உள்ள புதிய வீட்டிற்கு கடந்த 16.5.2015 புதிய மின் விண்ணப்பம் கோரி முறையீட்டாளர் உதவி மின்பொறியாளர் / ஊரகம்/திருப்பரங்குன்றம் அவர்களிடம் விண்ணப்பித்துள்ளார். அந்த விண்ணப்பம் கள ஆய்வு செய்த பொழுது முறையீட்டாளர் பொது பாதை என்ற வரைபடத்தில் கூறிய இடத்தில் கம்பம் நட்டு மின்இணைப்பு கொடுப்பதற்காக அனுமதியும் வழங்கப்பட்டது. அதற்கான மதிப்பீட்டுக்கட்டணம் 5.6.2015 அன்று முறையீட்டாளர் செலுத்தியுள்ளார்.

5.2 முறையீட்டாளருக்கு மின்இணைப்பு வழங்குவதற்காக மின் பாதை விஸ்தரிப்பு பணி செய்யும் போது திரு. பா. விருமாண்டி த/பெ பால்சாமி தேவர் தனக்கன்குளம் என்பார் அந்தப் பாதை உள்ள இடம் அவருடைய இடம் என்று ஆட்சேபனை தெரிவித்ததால் வேலை நிறுத்தி வைக்கப்பட்டது. அந்த பாதை பொதுவானது என்று மீண்டும் வருவாய்த்துறையினரிடம் சான்றிதழ் பெற்றுத்தரும்படி முறையீட்டாளருக்கு உதவி மின்பொறியாளர்/ஊரகம் / திருப்பரங்குன்றம் அவர்களிடமிருந்து கடித எண். உ.மி.பொ/ஊரகம்/திருப்பு/வ.உ/ கோ. கட்டு/ அ.எண்.374/2015 நாள் 24.7.16 கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

5.3 மேல்முறையீட்டாளருக்கு மின்பாதை அமைக்கும் இடத்தில் மின் கம்பம் ஊன்றக்கூடாது என்று திருமதி. பி. சரோஜா 21, சம்புராபுரம் கோரிப்பாளையம், மதுரை –2, 22.12.2015 அன்று ஆட்சேபனை அளித்தார். அதனால், அந்தப் பாதையில் மின் விஸ்தரிப்புப் பணி செய்ய இயலாமல் மின்இணைப்பு வழங்கவில்லை.

5.4 முறையீட்டாளர் மீண்டும் அதே வீட்டிற்கு வேற்றுப்பாதை வழியாக மின்பாதை வழங்க கோரி கடந்த 6.4.2016 அன்று உதவி மின்பொறியாளர் / ஊரகம்/திருப்பரங்குன்றம் அவர்களிடம் விண்ணப்பித்தார். அந்த வேறுபாதை திருமதி. பத்மாவின் வீட்டிற்கு மின் விஸ்தரிப்பு பணி செய்தால்தான் முறையீட்டாளருக்கு மின்பாதை அமைக்க முடியும் என்ற காரணத்தினால்தான் முறையீட்டாளரின் விண்ணப்பம் பத்மாவின் விண்ணப்பத்தோடு தொடர்ந்து மதிப்பீடு தயார் செய்யப்பட்டது.

5.5 மின்இணைப்பு மதிப்பீடு தயார் செய்ய புதிய இடத்தை கள ஆய்வு செய்த பொது திருமதி. பத்மாவின் கணவர் சுதந்திரபாரதி என்பவர் சவே எண்.362/33க்கு கிழக்கே உள்ள இடத்தை அவர் வாங்கப்போவதாகவும் அதற்கான முன்தொகை கொடுத்ததற்கான பத்திரத்தை காண்பித்ததின் பேரில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதற்கான தொகையும் முறையீட்டாளரால் செலுத்தப்பட்டது.

5.6 எல்லா மின்விஸ்தரிப்பு வேலைகளும் முடிந்த பிறகு முறையீட்டாளருக்கு மின்இணைப்பு கொடுப்பதற்கு முன் கீழே கண்டவர்கள் ஆட்சேபனை தெரிவித்தனர்.

(i) திரு. பி. பாலமுருகன், பிளாட் எண்.8, மொட்டலை கீழ்புரம் விளாச்சேரி

(ii) திருமதி. புஷ்பராணி க/பெ ஜேம்ஸ், பிளாட் எண்.7, மொட்டலை கீழ்புரம், விளாச்சேரி

தாங்கள் பிளாட்டின் வழியாக மின்பாதை அமைக்கக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவித்துள்ளார்கள்.

5.7 முறையீட்டாளர் மனைக்கு பொதுப்பாதைக்கான வரைபடம் தாசில்தார் அவர்களிடம் பெறப்படவில்லை. குறு அளவரிடம் பெற்றுத் தந்துள்ளார். பின்னர் அதே வரைபடத்தில் வி.ஏ.ஓ. விடம் கையொப்பம் பெற்றுள்ளார். அவர் அந்த வரைபடத்தில் பயன்பாடு பாதையாகத்தான் உள்ளது என்று கூறியுள்ளார்.

5.8 பொதுப்பாதைத் குறித்து 4.6.2016 அன்று மதுரை மேற்கு தாசில்தார் அவர்களுக்கும் கிராம நிர்வாக அலுவலர் விளாச்சேரி அவர்களுக்கும் முறையீட்டாளர் மனைக்கு பொதுப்பாதை உண்டா என்று ஊர்ஜிதம் செய்து வரைபடத்துடன் கூடிய சான்று அளிக்குமாறு உதவி மின்பொறியளர்/ஊரகம்/திருப்பரங்குன்றம் அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டது. மேற்கண்ட அலுவலர்களிடமிருந்து இது நாள் வரை பதில் பெற முடியவில்லை.

5.9 முறையீட்டாளருக்கு மின் இணைப்பு கொடுக்க முடியாது என்று தெரிவிக்கப்படவில்லை. திருமதி. பத்மா அவர்கள் ஆட்சேபனையை சரிசெய்யும் பட்சத்தில் அல்லது புதிய பாதை ஏதாவது காண்பித்தால் புதிய மதிப்பீடு தயார் செய்து அதற்குண்டான முழுக்கட்டணமும் சட்டச் சம்மதிக்கும் பட்சத்தில் முறையீட்டாளருக்கு மின்இணைப்பு வழங்கப்படும் என்பதை தங்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6. <u>மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

6.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக மின்குறைதீர்ப்பாளர் முன்பாக 18.1.2017 அன்று நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திரு. கே. லோகநாதன் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. முத்துராமலிங்கம், உதவி செயற்பொறியாளர்/கப்பலூர் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 தன்னுடைய வீட்டிற்கு பொதுப்பாதை உள்ளது என்றும், எனவே, அந்த பொதுப்பாதை வழியாக மின்சார இணைப்பு தரவேண்டும் என்றும், பொதுப்பாதை உள்ளது என்பதற்கு ஆதாரமாக குறுவட்ட அளவர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் சான்று அளித்துள்ள வரைபடத்தை சுட்டிக்காட்டி வாதிட்டுள்ளார். எனவே, திரு. விருமாண்டி அவர்கள் ஆட்சேபனை என்பது ஏற்புடையது அல்ல என்று வாதிட்டார்.

7.3 திருமதி. பத்மாவிற்கும், தனக்கும் மின்இணைப்பு வேண்டும் என்று கூட்டாக மனு செய்யவில்லை என்றும் அவ்வாறு தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது சட்டப்படி தவறு என்று வாதிட்டார்.

7.4 அவர் வீடு கட்டுவதற்கு விளாச்சேரி ஊராட்சியில் அனுமதி பெற்று உள்ளதாகவும் வீடு கட்டி முடிந்த பின்பு வீட்டு வரி செலுத்தி வருவதாகவும் தெரிவித்து தனக்கு மின்இணைப்பை தாமதப்படுத்துவது சரியல்ல என்று வாதிட்டுள்ளார்.

7.5 மேலும், அவருடைய கிரைய பத்திரத்திலும் அவரின் மனைக்கு வடக்கேயும் கிழக்கேயும் பாதை உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார். அவரின் கிரைய பத்திர நகலையும் சமர்ப்பித்துள்ளார்.

7.6 மேலும், அவருடைய layoutம் பொதுப்பாதை உள்ளது என்பது தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவரின் லே–அவுட் நகலை சுட்டிக்காட்டி வாதிட்டுள்ளார்.

7.7 அவர் மாற்று திறனாளி என்பதை மனதில் கொண்டு விரையில் மின்இணைப்பு வழங்க வேண்டும் என்றும் வாதுரை புரிந்தார்.

## 8. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரர் சார்பில் கேட்புரையில் கலந்து கொண்ட திரு. முத்துராமலிங்கம், உதவி செயற்பொறியாளர்/கப்பலூர், அவர்கள் தன்னுடைய பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 மேலும் விருமாண்டி அவர்கள் முறையீட்டாளருக்கு மின்இணைப்பு வழங்குவதற்காக மின்பாதை விஸ்தரிப்பு பணி செய்யும் பொழுது ஆட்சேபனை செய்ததால் அந்த பாதை பொதுவானது என்று வருவாய்துறையிடம் சான்று பெற்று தரும்படி மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆனால், குறு அளவர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் தான் அவற்றில் சான்று அளித்துள்ளனர் என்றும் வட்ட ஆட்சியர் அவர்களின் சான்று அளிக்கவில்லை என்றும் வாதிட்டார்.

8.3 மேலும், மாற்றுப்பாதையில் மின்பாதை அமைத்து மின் இணைப்பு வழங்கவும் பிளாட் எண்.8ன் உரிமையாளர் திரு. பாலமுருகன் அவர்களும் பிளாட் எண்.7ன் உரிமையாளர் திருமதி. புஷ்பராணி அவர்களும் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர் என்றும் வாதிட்டார். மேலும், கிராம

நிர்வாக அலுவலரும் மேற்கண்ட பாதை தற்போது பாதை என்ற பயன்பாட்டில் உள்ளது என்று தெரிவித்துள்ளார். அது பாதை என்று உறுதியாக கூறவில்லை என்றும் வாதிட்டார்.

8.4 மேலும், வாரியம், மின்இணைப்பு கொடுக்க தயாராக உள்ளது என்றும், ஆட்சேபனையற்ற மின்பாதையை மேல்முறையீட்டாளர் ஏற்பாடு செய்து கொடுத்து அதற்குண்டான மதிப்பீட்டு தொகையை செலுத்தும் பட்சத்தில் மின்இணைப்பு வழங்கப்படும் என்றும் வாதிட்டார்.

8.5 கேட்புரை நாளில் எதிர்மனுதாரரின் பிரதிநிதி மேலும், 15 நாட்கள் கால அவகாசம் அளித்தால் மின்இணைப்பு வழங்குவதற்கு ஆட்சேபனை செய்பவர்களிடம் பேசி ஏற்கனவே அமைக்கப்பட்ட மின்பாதை அல்லது வேறுபாதை வழியாக மின்பாதை அமைத்து மின்இணைப்பு வழங்க ஏற்பாடு செய்ய முயற்சி செய்வதாக தெரிவித்தார். ஆனால், தன்னுடைய 1.4.2017 நாளிட்ட பதிலுரையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(i) மதுரை மேற்கு தாலுகா விளாச்சேரி கிராம சர்வே எண்.352/2பி–ல் உள்ள மனை எண்.28 மற்றும் 29 இடத்திற்கு திரு. கே. லோகநாதன் புதிய வீடு கட்டி மின் இணைப்பு கோரி மனு செய்து மின் விஸ்தரிப்பு பணி செய்யும் பொழுது ஆட்சேபனை தெரிவித்ததால் மின்இணைப்பு வழங்க முடியவில்லை. 31.1.2017 அன்று மீண்டும் ஆட்சேபனை கொடுத்த திரு. பி. பாலமுருகன், தேனி, (2) திருமதி. ர. புஷ்பராணி க/பெ ஏ. ஜேம்ஸ் என்பவருக்காக திரு. ஜேம்ஸ் சென்னை அவர்களிடம் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அவர்கள் மீண்டும் ஆட்சேபனை தெரிவித்து கடிதம் கொடுத்தனர். அதன் நகல்கள் தங்களின் மேலான நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

(ii) மேலும், இது குறித்து வட்டாட்சியர், கிராம நிர்வாக அதிகாரி வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோருக்கு பொதுபாதையை அடையாளம் காட்டி தருமாறும் ஆக்கிரமிப்பை அகற்ற கோரியும் உதவி மின் பொறியாளர்/திருப்பரங்குன்றம் கடிதம் எழுதியுள்ளார். இது நாள் வரை பதிலில்லை. மின்துறை அலுவலர்களும், திரு. கே. லோதநாதனும் பலமுறை வருவாய்துறை அலுவலர்களை சந்தித்தும் உரிய பதில் இல்லாமல் உள்ளது.

## 9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது எதிர்மனுதாரர் அவர் மின்இணைப்பு கொடுக்க தயாராக உள்ளதாகவும் ஆனால், மின்பாதை அமைக்க ஆட்சேபனைகள் உள்ளதால் மின்இணைப்பு வழங்க முடியவில்லை என்று தெரிவித்துள்ளார்.

9.2 இந்த மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதத்தில் அவருடைய வீட்டிற்கு ஒரு பொதுப்பாதை உள்ளது என்றும் அதற்கு ஆதாரமாக குறு வட்ட அளவர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் சான்று அளித்துள்ளனர் என்றும் அந்த வரைபடத்தின் நகலையும் அளித்துள்ளார்.

9.3 மேலும், அவருடைய கிரைய பத்திரத்திலும் அவருடைய வீட்டுமனை எண்.28 மற்றும் 29ற்கான நான்கு மாலில் வடக்கே 30 அடி பொதுரோடும், கிழக்கே 20 அடி பொது ரோடும் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

9.4 எதிர்மனுதாரர் அங்கு பொதுப்பாதை உள்ளது என்பதற்கான வரைபடம் 30.1.2017 நாளிட்ட கடிதத்தில் வட்டாட்சியரிடம் கோரப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து அந்த கடிதத்தின் நகலை சமர்ப்பித்துள்ளார்.

9.5 மேலும், வட்டார வளர்ச்சி அலுவலர் ஊராட்சி ஒன்றியம் திருபரங்குன்றம் அவர்களுக்கும் பொதுப்பாதையில் தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் பொதுப்பாதைக்கான இடத்தை கண்டறிய இயலவில்லை. எனவே, பொதுப்பாதை என அனுமதிக்கப்பட்ட இடத்தை தெரிவிக்க கூட்டு கள ஆய்வு செய்ய துறை ரீதியான ஒத்துழைப்பு வேண்டும் என்றும் உதவி பொறியாளர்/ஊரகம்/திருப்பரங்குன்றம் அவர்கள் 30.1.2017 அன்று கோரியுள்ளார் என்றும் அறிய முடிகிறது.

9.10 மேலும், மாற்றுப்பாதையில் அமைத்த மின்பாதை தங்களுடைய மனை வழியாக செல்வதால் அவற்றை அகற்றவேண்டும் என்றும் திரு. பி. பாலமுருகன், (மனை எண்.8) மற்றும் திருமதி. ஜெ. புஷ்பராணி (மனை எண்7) ஆகிய இருவரும் தங்களின் மனை வழியாக மின்பாதை அமைத்து

மின்இணைப்பு வழங்க ஆட்சேபனை தெரிவித்துள்ளார்கள் என்றும் அறிய முடிகிறது. எனவே, ஆட்சேபனையை நீக்கி தரவில்லை எனில் அந்த பாதை வழியாக மின் இணைப்பை தரமுடியாது என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையதாக உள்ளது.

**9.11** மேல்முறையீட்டாளரின் மனைக்கு பொது வழி உள்ளது என்று மேல்முறையீட்டாளர் வாதிட்டுள்ளார். அதற்கு ஆதாரமாக குறு வட்ட அளவர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் சான்றிடப்பட்ட வரைபடத்தையும் சமர்ப்பித்துள்ளார். மேலும், அவரின் கிரைய பத்திரத்திலும், அவரின் வீட்டிற்கு வடக்கேயும், கிழக்கேயும் பொது ரோடு உள்ளதாக குறிக்கப்பட்டுள்ளது. பொது வழிப்பாதை இருக்கும் பட்சத்தில் அதன் வழியாக மின்பாதை அமைத்து மின்இணைப்பு கொடுப்பதற்கு தடையேதும் இருக்க முடியாது. ஆனால், இங்கு திரு. விருமாண்டி என்பவர் அதன் வழியாக மின்பாதை அமைக்க ஆட்சேபனை செய்கிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**9.12** ஆனால், அந்த பொதுப்பாதையின் வட்டாட்சியர் சான்று பெற்ற வரைபடம் மற்றும் அந்த பொதுப்பாதைக்கான உரிய சான்றிதழ் கிடைக்கும் பட்சத்தில் உரிமம்தாரர் மின்இணைப்பு வழங்க தயாராக உள்ளார் என்பதையும் அறிய முடிகிறது.

**9.13** எனவே, உரிமம்தாரர் மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு பொதுப்பாதை உள்ளது என்பதை உரிய வருவாய் பிரிவு அலுவலக மூலமாக உறுதி செய்து அல்லது சம்பந்தப்பட்ட ஊராட்சி நிர்வாகத்திடம் அவ்வாறு பொதுப்பாதை இருப்பதை உறுதி செய்து அதன் வழியாக மின் பாதை அமைத்து மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 10. <u>முடிவுரை</u>

**10.1** மேல்முறையீட்டாளர் தன்னுடைய வீட்டிற்கு பொதுப்பாதை உண்டு என்று தெரிவித்துள்ளதால் அவ்வாறு பொதுப்பாதை உள்ளது என்பதை உரிய வருவாய் பிரிவு அலுவலரிடம் சான்று பெற்று

பொதுப்பாதை இருந்தால் அந்த பாதை வழியாக மின்பாதை அமைத்து மேல்முறையீட்டாளருக்கு மின்இணைப்பு வழங்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

10.2 மேற்கண்ட முடிவுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண்.85/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ.தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. கே. லோகநாதன்,
165, ஜி.எஸ்.டி ரோடு,
திரு நகர்,
மதுரை

2) செயற்பொறியாளர்/இ&ப/திருமங்கலம்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
துணை மின் நிலைய வளாகம்,
உசிலம்பட்டி ரோடு, திருமங்கலம் – 625 706.

5) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.புதூர், மதுரை– 625 007.

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

7) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) – **<u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.